ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி.

*வினா எண். 459— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மக்களுக்கு கொடுக்கப்படும் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஆடுகளுக்கு வைத்திய உதவி சரியாக செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: (அ) இது குறித்து புகார்கள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் ஆடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கிற நேரத்தில் ரூ. 1,000 சொத்து ஜாமீன் கொடுத்தால்தான் கடன் கொடுக்கப்படுவதாக அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற இந்தக் கடன் திட்டத்தில், இந்த சொத்து ஜாமீனை செலுத்தாமல் இருக்கும் வகையில் மறுபரிசீலனை செய்து, இனாமாகக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்பெதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத்தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஆடு வளர்ப்புச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை என்ன ? எந்தத் திட்டத்தின்கீழ் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? உலக வங்கியின் உதவியோடு ரூ. 47 கோடி அளவில் போடபட்ட ஆடு வளர்ப்புத் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதா? அது குறித்த விவரம் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

1979 மார்ச் 17]

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறுபட்ட கால்நடை பராமரிப்பு திட்டங்களின் கீழ் ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 227 இருக்கின்றன. வேளாண்மை மறுநிதி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 39-ம் மலைப்பகுதி மேம்பாட்டு அபிவிருதத்தி திட்டத்தின்கீழ் 4-ம், சிறப்பு கால்நடை திட்டத்தின்கீழ் 83-ம், தீவிர வறண்டநில அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 60-ம், பழங்குடி மக்கள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 2-ம் மற்றவைகள் 39-ம் ஆக, மொத்தம் 227 சங்கங்கள் இருக்கின்றன.

மாநில அரசு ஆடு வளர்ப்புத் திட்டங்களுக்காக உலக வங்கி நிதியுதவி பெறும் பொருட்டு ரூ. 47 கோடி செலவில் ஒரு ஆடு வளர்ப்புத் திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத் திட்டத்தின் நோக்கம் ஏழை விவசாயி களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதே ஆகும். ஆட்டுப் பிரிவு ஒன்றின் மூலம் விவசாயி 6-வது ஆண்டின் இறுதி யில் ரூ. 8,500ஐ நிகர வருமானமாகப் பெறுவார். 33,000 ஆட்டின பிரிவுகளை ஏற்படுத்துதல் ; தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்துதல் பெரிய அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதல் - கலப்பின ஆடு விருத்திப் பண்ணை நிறுவுதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, பழங்குடி மேம் பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இரண்டும், மலைப்பகுதி மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் 4 ம் இருக் கின்றன. அந்த 6 சங்கங்கள் எந்த, எந்த இடத்திலே இயங்கு கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. செ. சதாசிவம் : துணைத் தலைவரவர்களே, இந்த ஆடு வளர்ப்பு முன்னேற்ற திட்டங்கள் எல்லாம் கிராமப் புறங் களில் செயல் படுவதால், கிராமப் புறங்களில் ஊராட்சி மன்றங் கள் அதைக் கவனித்து வருவதால், இப்பொழுது, பி.வி.எஸ்.ஸி. டாக்டர்கள் ஏராளமானடேர், படித்து விட்டு, பட்டம் பெற்ற வர்கள் வேலையில்லாமலிருக்கும் நேரத்திலே, ஊராட்சி ஒன்றியங்களிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற முறையிலே அவரை நியமித்து இது போன்ற கால்நடைகளுக்கு வைத்திய வசதி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு கால் நடை உதவி மருத்துவர் வீதம் 39 சங்கங்களில் ஏற் கனவே செயல்பட்டு வருகிறார்கள்.

[1979 மார்ச் 17

[முற்பகல் 11.00]

திரு. வி. கோ. சின்னசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஆடு வளர்ப்புத திட்டத்தின் கீழ் மக்களுக்கு கொடுக்கப்படும் இந்த உதவி சரியாகச் செய்யப்பட வில்லை. ஆனால் இது பற்றி இது வரையில் புகார் எதுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் மேலும் இரண்டு 'சப் சென்டர்ஸ்' திறந்து— திறக்கப் படும் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம்—நாளுக்கு நாள் பெருகி வருகின்ற கால் நடைகளை சரியாகப் பராமரிப்பதற் காக புதிதாக ஒரு பி.வி.எஸ்.ஸி. டாக்டரையும் நியமித்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச் சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் கிராம கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாகவும் எங்கள் பகுதிக்கு ஆடுகள் வழங்கப்பட்டன. அப்படி வழங்கப்பட்ட ஆடுகள் பல இறந்து விட்டன. அதனால் கொடுக்கப்பட்ட கடனை அரசு தள்ளுபடி செய்ய முன் வருமா ? சரியான பாதுகாப்பு வசதியும், பாதுகாப்பும் இல்லாத கார ணத்தால் இறந்து விடுகின்ற ஆடுகளுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : அது பற்றிய செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மானியம் முறையில் ஆடு வளர்ப்புக்கான அந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் இல்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்புக்கான எல்லா வாய்ப்பும் இருந்தும் இத்திட்டம் அங்கே இல்லை. அது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வகையானத் திட்டம் செயல் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்டத் தில் இந்தத் திட்டம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

1979 மார்ச் 17]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் பரம்பரையாக ஆடுகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அரசாங்கம் ஏதாவது உதவிகள் செய்திருக்கிறதா ? அவர்களில் எத்தனைபேர், எத்தகைய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்தக் கால்நடை வளர்ப்புத் துறை அறியுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : அது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுவரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. பொ. விஜயராகவன் : சார், நேற்றையதினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் தார்ணா போராட்டம் நடத்தி 19 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி அறையிலே கேட்கவேண்டுமே தவிர அவையில் கேட்கக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள். நான், என்ன பிரச்சனையை எடுத்துக் கொள்ளப் போகிறேன் என்பதைப் பார்த்துவிட்டு, அதன் பிறகு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புங்கள்.

(ஆ) சட்டமன்றத் துறைக்கு போதுமான இடம் ஒதுக்குவது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இங்கே ஆர். ஆர். செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் போய் நின்று, அல்லது உட்கார்ந்து எழுதிக் கொடுத்து, தட்டெழுத்து செய்து வாங்க வேண்டும். ஆனால் அங்கே உட்கார இடம் கிடையாது. ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டியிருக்கிறோம். இங்கே இருக்கின்ற மற்ற இலாக்காக்